CAUSSANEL PROVINCE
Private Circulation Only

ADHIRIVALAI
# அதிர்வலை
கவுசானல் மாநில மாதச் செய்தி மடல்

மே 2025 | வலை 08 | பின்னல் 47

*"As Jesus was saying these things, a woman in the crowd called out, "Blessed is the mother who gave you birth and nursed you"* (Luk: 11:27)



***Dear Brothers, Prayerful Greetings to you all in the sweet and most precious name of the Most Sacred Heart of Jesus!***

The tradition of dedicating the month of May to Mary, came about in the 13th century. Some say because it was created to replace various pagan cults. The actual reason is the fact that this month is the time when spring is at the height of its beauty. Spring is also connected with nature renewing itself. In her way, Mary gave new life to the world when she gave birth to our saviour Jesus Christ. The pious practice of honouring Mary during the month of May has been especially promoted by the Popes. Pius XII made frequent reference to it and in his great Encyclical on the Sacred Liturgy Mediator Dei. He characterized it as one of "other exercises of piety which although not strictly belonging to the Sacred Liturgy, are nevertheless of special import and dignity, and may be considered in a certain way to be an addition to the liturgical cult: they have been approved and praised over and over again by the Apostolic See and by the Bishops". Devotion to Mary is an important part of the Catholic identity. As our mother she is an example of a committed "Yes" to the will of God. Because of the devotion to her many people ask her for help in the most difficult moments of their life as any child does with his mother.

**Eight notable qualities of Mary, The Mother of Jesus**

- **Profound Humility:**
Mary recognized her own insignificance and submitted to God's will, even when faced with extraordinary events.
- **Lively Faith:**
Mary's unwavering faith in God enabled her to accept the news of the Incarnation and to trust in God's plan.
- **Obedience:**
Mary's willingness to obey God's commands, even when they were difficult or incomprehensible, is a testament to her obedience.
- **Unceasing Prayer:**
Mary's life was marked by constant prayer and devotion, as she sought God's guidance and support.
- **Constant Self-Denial:**
Mary's willingness to forgo her own desires and comfort for the sake of her mission and her son is a reflection of her self-denial.
- **Surpassing Purity:**
Mary's purity of heart and body is a symbol of her holiness and her dedication to serving God.
- **Ardent Love:**
Mary's love for God and for Jesus is evident in her actions and her unwavering faith.
- **Heroic Patience:**
Mary's ability to endure hardship and suffering with grace and patience is a model for all believers.

The above qualities in a religious life is declining at present. Comparison of individual difference is in highest mode in our communities. As a religious we are looking for a model to live good and exemplary life in the society. The God has given us Mother Mary as a Model to reflect our life in goodness. So, Let us try in the month of May, to closely follow the Marian devotions personally (as a community) with dedication. May the Mother bless us and keep us safe from all evils.

Though there is a lack in vocation in our congregation. Month of May as a religious we are going to thank the Lord for the gift of our brothers. The Brothers were used by our Lord as instruments in His mission for the last 60, 50, 25 years, along with them we are going to thank the Lord for the Mission and life. One Brother is going to profess a perpetual profession and going to be partner of our Mission. Let us Praise the Lord.

Others are celebrating their Diamond, Golden and Silver Jubilee in the Mother Institute. Let us trust that the Lord will give energetic youth to join our Mother Institute and work for vocation with unflinching faith and resolve.

Let us wish and appreciate all the Brothers who are celebrating their Birthdays and Feast days in this month.

May I also request you to remember in your daily prayers all the Brothers who had rested in the Lord in this month

**Br. A. Stephen Arockiasamy, SHJ**
*Provincial Superior*

## Provincial's Programme
## May 2025

**01 PALAYAMKOTTAI**
*Jubilee Function*

**02 TRICHY**
*Novitiate*

**04 TRICHY**
*Vocation Camp*

**05 MARAVAPATTY**
*Function*
**TRICHY**
*Meeting - Jr. Brothers*

**10 PROVINCIALATE**
*Province Consult Meeting*

**11-12 PALAYAMKOTTAI**
*Transfer Meeting*

**17 SENGUDI**
*Jubilee Function*

**28-30 SUHALAYAM**
*Leadership Prgramme*

## Important Days / Events

**01 - JUBILEE & FINAL VOWS**

**13 - FEAST OF OUR LADY OF FATIMA**



### Thought of the month

"Inspiration comes from within yourself. One has to be positive. When you're positive, good things happen."
*- Deep Roy*

## Panagudi













The 3rd Annual Day of Sacred Heart Public School was celebrated in a grand and memorable manner on April 5, 2025. The event was graced by distinguished guests, including the Superior General, Provincials from the Caussanel and Angelo Provinces, and other members of the brotherhood. The guests were warmly welcomed by the staff community, who performed the traditional Kumba Aarathi, followed by the presentation of coconuts (Nariel) and badges. A highlight of the evening was the stunning presentation of Shakespeare's A Midsummer Night's Dream, which was staged by the students. The performance, executed with perfect pronunciation and intonation, captivated the audience, leaving them spellbound. In addition, there were several other remarkable performances, such as a moving mime and dazzling stage dance events, which rejuvenated the audience and left a lasting impression. The school took a moment to honor its high achievers, with Class Toppers, School Toppers, and students with 100% attendance being awarded medals and shields in recognition of their hard work and dedication. This recognition served as a motivational boost, encouraging the students to continue their efforts in the future. The program was attended by around 1,300 parents and students, making it a memorable and successful celebration for the entire school community.







The 3rd Graduation Day was celebrated on 4th April, 2025. The staring buds of Upper Kindergarten were felicitated by the guests, Parents, Staff and audience with a certificate and the medal. The kids of KG Block hosted the programme on the entirety with spectacular stage events. Rev.Br.A.Stephen Arockiasamy – Provincial Superior, Shri.A.T.Rajaram B.Sc (Agri) – Inspector of Police, Rev. Br.M. Jesu Arulanandam – Correspondent and other community brothers were the guests of the day. Dance of Gratitude, Mime and the anchoring were the center of attraction. G. Govardhan Yogasanth of LKG B recited 70 thirukkurals all at a time with proper coherence and spontaneity. The spectators were left flabbergasting with the rocking stage performance of the students.








The 17th Annual Day and Graduation Ceremony of our school took place on 08-04-2025 , graced by the presence of Rev.Bro.A.Stephen Arockiasamy the Provincial Superior. The event was made memorable by the participation of our community brothers and neighbouring community brothers who joined and make it a grand celebration.

## Singampatti













## Singampatti

The 80th Annual Day of St. Michael's Primary School, Singampatti, along with the retirement celebration of Mrs. Maria Michael Lithisya, was held on 10th April 2025 with great enthusiasm. The event was presided over by Rev. Bro. A. Stephen Arockiasamy, the Provincial Superior of Caussanel Province, in the esteemed presence of the Correspondent, Bro. John Peter. Bro. M. Jesu Arulanandam and Bro. I. Arockiam delivered touching felicitation speeches, celebrating the school's journey and Mrs. Lithisya's dedicated service. The occasion was graced by several special guests including Mrs.Meenakshi, Education Officer from Ambasamudram, playback singer Kalaisudar James from Chennai, Dr. Ilayaraja from the Government Hospital, Ambasamudram, and Mrs. Thiruvalar Selvi, Teachers Instructor, Ambasamudram. Students captivated the audience with a series of enthralling cultural performances, adding vibrancy and joy to the memorable event.








## Christhu Jyothi

A science exhibition was held on 3rd April 2025 at Christhu Jyothi Primary School. The students showcased their talents and creativity through various innovative projects and experiments.









## Vickramasingapuram

The Under Kindergarten (UKG) Graduation Ceremony was held on 03-04-2025 at St. Mary's Matriculation High School campus. The event marked a significant milestone in the lives of our young graduates as they bid farewell to the UKG program and prepared to embark on their formal kindergarten journey. The motto of the UKG Graduation Ceremony, "Little Minds, Big Future," reflects our commitment to nurturing young minds and fostering a love for learning. The event was graced by the presence of Rev. Br. A. Stephen Arockiasamy, the Provincial Superior of Caussanel Province, who served as the President of the ceremony. The Chief Guest was Mr. S. Maheshwaran, Commissioner of Municipality, Vickramasingapuram. The Guests of Honour included Br. I. Joseph, Br. P. Prakash, Mr.M.Ganesan (Manager, Municipality of Vickramasingapuram), and Mr.Thangamani (Representative, Municipality).Their presence added great significance to the event, and their inspiring addresses motivated the graduates to strive for excellence in their future endeavours.

# இந்தப் பூக்களுக்கு அர்ச்சனை

பூக்கின்ற மலர்கள் எல்லாம் பூஜை மலர்கள் ஆவதில்லை. வரும்முன் சில வாடி விடுகின்றன. வரும் வழியில் சில தவறி விடுகின்றன. சில வஞ்சிகளின் கூந்தலை அலங்கரிக்கச் சென்று விடுகின்றன. சில பூக்களே ஆண்டவனுக்காய் பிறந்து, அர்ச்சனைக்காய் மலர்ந்து, இறைவன் பாதத்தை இறைபணியில் அலங்கரிக்கின்றன. நிரந்தர அர்ப்பணமாக இருபத்தைந்து, ஐம்பது, அறுபது ஆண்டுகளைக் கடந்து ஆண்டவரின் மலர்களாக அர்ப்பணத்தை அலங்கரிக்கும் இதய சபைத் தோட்டத்து இனிய மலர்களின் சுவடுகளைப் பற்றி இதயம் திறக்கிறேன்.

## அறுபதைக் கடந்து நிற்கும் அர்ச்சனை மலர்கள் இரண்டு




### அருட்சகோ.S.ஆரோக்கியநாதன், SHJ

முதலில் நான் முகர்ந்து பார்ப்பது ஐயா S.ஆரோக்கியநாதன் வைக்கம்பட்டி வீரர், செபஸ்தியான் - பெரியநாயகம் குமாரர், இறைவாக்கு உரைப்பது இவரது பணி, நகைச்சுவைப் பேச்சுக்காரர், வரலாற்று அடிச்சுவடுகளை வரிசைப்படுத்திப் பேசக்கூடியவர். இதனால் காலப்போக்கில் இவர் பேசுவதே வரலாறு ஆகிப் போனது. எதைப் பற்றிப் பேசச் சொன்னாலும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பேசக்கூடியவர். மறைபரப்புப் பணிக்கு மறு உருவம் கொடுத்தவர். மங்கா புகழோடு செங்காந்து நிற்கும் ஐயா அவர்களை வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்.

### அருட்சகோ.I.விக்டர், SHJ




இதயம் கவர்ந்த இரண்டாவது மலர் ஐயா I. விக்டர் அவர்கள் மிக்கேல் பட்டணம் தந்த பெட்டகம். இன்னாசி - சூசையம்மாளின் வம்சம். விரல்கள் பத்தால் ஸ்வரங்கள் ஏழினைப் பிரித்தெடுக்கும் வித்தியாசமான வித்தகர். இதய சபையின் நவ துறவு என்னும் நாற்றங்கால்களை நல்வழிப்படுத்தியவர். ஆட்சி உரிமையிலும் அதிசயங்களை விதைத்தவர். சங்கீதங்களை நல் வார்த்தைகளால் கோர்த்து சங்கே முழங்கு என முழங்கியவர். "வாழ்வென்றால் எனக்கு கிறிஸ்துவே" என்ற வார்த்தைகளை வழங்கியவர், இவரது ஆட்சிக் காலத்தில் எத்தனை இசைத்தட்டுகள், எத்தனை வரலாற்றுப் புதினங்கள், இறந்த சகோதரர்களின் வரலாற்று பக்கங்களை "விழுதுகள்" என்ற பெயரில் பதிவு செய்தவர். கடைசியில் கல்விப் பணியிலும் காலடி வைத்த இந்த வரலாற்று நாயகனை வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்.

## 50 ஆண்டுகளைக் கடந்து திளைக்கும் சந்தன மலர்கள் ஐவர்




### அருட்சகோ.S.சேசுராஜ், SHJ

செங்குடி தந்த செம்மல் ஐயா S. சேசுராஜ். சவரிமுத்து - ஞான சௌந்தரியின் சந்ததி. தொடக்கக் கல்வியின் இறைத்தூதுவர். மந்தைகளைத் தேடிச் செல்லும் ஆயனைப் போல் குழந்தைகளைத் தேடிச் சென்று கல்வி தந்த பிதாமகன். மணல்வீடு கட்டி விளையாடும் பள்ளிச் சிறுவர்களுக்கு தூத்துக்குடியில் அந்த மணற் பகுதியிலேயே தொடக்கக் கல்விக்கு அருமையான கட்டிடம் அமைத்து அழகு பார்த்தவர். ஏழைகளின் நண்பன். எளியவர்களின் வழிகாட்டி, முறைப்போ, முணுமுணுப்போ இன்றி கொடுத்த வேலையை நிறைவாய் செய்வார். கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடு இவரிடம் இன்னமும் காணக்கிடக்கும். சகோதரரை மனதார வாழ்த்துகிறேன் வணங்குகிறேன்.

### அருட்சகோ.A.மைக்கேல், SHJ





அலங்காரம் - சூசையம்மாளின் தவப்புதல்வன், ஐயா A. மைக்கேல். வணங்காநேந்தலில் வலம் வந்த இந்தத் தமிழ் காற்று பல ஆண்டுகள் மலையாளத்தில் தான் பேசியது. மலையாளத்தில் பேசியதால் அங்கு வாழ்ந்த மலைவாழ் மக்களோடு மனம் விட்டு பேசியது. இவர் காந்தலூர் நாயகன். பல சகோதரர்கள் குளிரில் நடுங்கி, குளிரைக் கண்டும் நடுங்கி, ஊரை உதறிவிட்டு ஓடிவரும் போதும், கலப்பையில் கை வைத்தவன் திரும்பக் கூடாது என்பதில் நம்பிக்கை வைத்து கடைசி வரை அங்கு அடித்தட்டு மக்களுக்காக நங்கூரமாய் நின்று வழிகாட்டியவர் இவர். வந்தார்கள் போனார்கள் என்றில்லாமல், வந்தார்கள் பணி செய்தார்கள் என்பது இவரது வரலாறு. இசைத்துறையிலும் இவருக்கு ஈடுபாடு அதிகம். வடஇந்தியாவிலும் வலம் வந்தவர். இன்னும் பல வரலாறு படைக்க வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்




## அருட்சகோ.V. லூர்து, SHJ

நங்காத்தூர் தந்த நம்பிக்கை நட்சத்திரம் ஐயா V.லூர்து. வனத்தையன் - ஞானசௌந்தரியின் வாரிசு. கல்விப் பணிக்காய் தன்னை அர்ப்பணித்தவர். ஆட்சிப் பணியில் அமரும்போது ஆணைக் குழுவில் பல்வேறு சீர்த்திருத்தங்களைச் செய்தவர். சமுதாயத்தில் விலாசம் இழந்தவர்களுக்கு விலாசமாய் நின்றவர். சொல்வதைச் சுருக்கமாகச் சொல்வார். சுருக்கென்றும் சொல்வார். நண்பர்களோடு சிலகாலம், நற்பணியில் சிலகாலம், உற்சாக மூட்ட சிலகாலம், உடனிருக்கச் சிலகாலம், வழிகாட்ட சிலகாலம், வழி நடக்க சிலகாலம் எனக் காலங்களைப் பகுத்து வகுத்து தன்னை வளர்த்தெடுத்து பிறருக்கு வாழ்வளித்தவர். இன்று கல்விப் பணியாற்றும் பலருக்குக் கண் திறந்து வைத்தவர் இவர். முனைவரே வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்.

## அருட்சகோ.R.கஸ்மீர் சகாயநாதன்,SHJ




புன்னகை ரோஜா ஐயா R. கஸ்மீர் சகாயநாதன். மதுரை தந்த மகான் இவர். ராஜேந்திரன் - அருள் பிரகாஷியின் தவப்புதல்வன். வார்த்தைகளை பொறுக்கி எடுப்பவர்கள் மத்தியில் வார்த்தைகளைச் செதுக்கி எடுப்பவர். தமிழில் ஆங்கிலம் கலக்காத, ஆங்கிலத்தில் தமிழ் கலக்காது பேசும் அட்சய பாத்திரம். இவரது நாவு பேச்சிற்கும், இவரது கரங்கள் எழுத்துப் பணிக்கும் இவரை இழுத்துச்சென்றது. கல்விப் பணியும், ஆட்சி பணியும் இவருக்கு இரு கண்கள் போன்றது. இவரது பணியால் இங்கு பார்வை பெற்றவர்கள் பலர். மேடையில் வார்த்தையில் முழங்கவும், இறை வார்த்தைகள் வழங்கவும் இரு வேறு அவதாரங்கள் எப்பவும் எடுப்பார். இவர் எல்லோருக்கும் எல்லாமுமானவர். முதியவர்களோடு விவாதிக்கவும் செய்வார், குழந்தைகளோடு அரட்டை அடிக்கவும் செய்வார். ஆன்மீகத்தில் இவர் சமத்துவம் பேசுவார். புரட்சிகளுக்கு புடமிடுவார். மறுமலர்ச்சிக்கு வடம் பிடிப்பார். இவரோடு இருப்பது இருப்பவர்களுக்கு மகிழ்ச்சி தரும். எங்கள் ஐயாவே வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்.




## அருட்சகோ.S.லூர்துசாமி,SHJ

ஐயா S. லூர்துசாமி. இருதயம்பட்டுவின் இதயம். சவரியப்பன் - சின்னம்மாளின் உதயம். படித்துப் பட்டம் வாங்க வேண்டும் என்பதனைப் பிடித்துக்கொண்ட இவரது இலட்சியத்திற்காக இவரது பெயருக்குப் பின்னால் பட்டமானது இவரை அழைக்கும் போதெல்லாம் வந்து ஒட்டிக் கொண்டது. கல்விப் பணியில் அடக்கத்துடன் கூடிய வெற்றிகளை அரங்கேற்றம் செய்தவர். பின் தங்கிய பள்ளிகளில், வந்துதங்கியே பிள்ளைகளை வளர்த்தெடுத்தவர், உயர்பதவியிலும் எளிமையாக வாழ்ந்தவர். ஏற்றத்தாழ்வு பார்க்கமாட்டார். எவர் ஏற்றத்தைக் கண்டும் பொறாமைப்படவும் மாட்டார். கொடுத்த பணியில் பிரமாணிக்கமாய் இருப்பதையே கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தவர். கொள்கை வேந்தன். இன்று விண்ணகத்தில் இறைவனோடு தனது துறவற பொன்விழாவினைக் கொண்டாடுகிறார். அவருடைய ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றியடைய செபிப்போம்.

**25 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இனிய ரோஜாக்கள் பத்து. இவைதான் இன்று இதய சபையின் சொத்து**

## அருட்சகோ.I.ஆரோக்கியம், SHJ




சகோ. I.ஆரோக்கியம் கீழமாத்தூரில் கண்டெடுக்கப்பட்ட இயேசுவின் இதயம். இருதயம் - திரசம்மாள் இதய சபைக்குக் கொடுத்த இனிய காணிக்கை. நல்ல சமாரியன். பூக்களினும் மென்மையான வார்த்தைகளைப் பேசுவார். தனக்கென எதையும் சேமிக்காத தன்னம்பிக்கை உள்ளவர். அறிவுச் செல்வத்தைத் தேடித் தேடிச் சேகரித்துக் கொண்டவர். மாணவர்களைக் காயப்படுத்தாமல் அவர் மனதிற்குள் மகரந்தம் சேர்க்கும் தேனி. தழும்பாத நிறைகுடம், தடம் மாறாத வழித்தடம். பொறுமையின் சிகரம். அருமையின் இருப்பிடம். நண்பர்களுக்கு இலக்கணம். இவருக்குத் தெரியாத ஒன்று தலைக்கணம். பொறுத்துப் போகிறவர், யாரோடும் பொருந்திப் போகிறவர். பிறர் வளர்ச்சிக்கும் சபை வளர்ச்சிக்கும் தன்னைப் பகிர்ந்து கொடுக்கிற நல்லாயனே உம்மை வாழ்த்துகிறேன்.




## அருட்சகோ.S.மைக்கேல் தங்கராஜ், SHJ

சோமநாதபேரி தந்த சுதன் சகோ. M.மைக்கேல் தங்கராஜ். மரியமிக்கேல் - நட்சத்திர அம்மாளின் மகன் இவர். இறைவாக்கினரின் இன்றைய சாயல். தவறுகளோடு சமரசம் செய்யாமல் துணிந்து அதனைத் தட்டிக் கேட்கத் துடிப்பவர். தூசிகள் துடைக்கப்பட வேண்டும் என்று துணிந்து போராடுகிறவர் நீதிக்காக இவர் இழந்தது அதிகம். நண்பர்கள் பகைவர்கள் ஆனாலும் நான் எடுத்து வைத்த கால்கள் எவர் சொன்னாலும் பின்வாங்காது என அடம்பிடிப்பவர். நீதி வாழ்ந்தால் சமுதாயம் வாழ்ந்து விடும் என்று நெஞ்சில் பதித்தவர். கொடுக்கப்பட்ட கல்விப் பணியில் தான் எடுத்த இலக்கை அடையத் துடிக்கும் இளவலே உன்னை வாழ்த்துகிறோம்.




## அருட்சகோ.M.வில்லியம்ஸ், SHJ

வீ.புதூர் தந்த புதியவன் சகோ.M.வில்லியம்ஸ். மரியசூசை - லூர்து மேரியின் புத்திரன். தான் எடுத்த கொள்கையில் உறுதியானவர். சமூகப் பணிக்காய் இளமைத் துடிப்பும், சாமானிய மக்களுக்காய் இதயத்துடிப்பும் சரிநிகராயக் கொண்ட சரித்திர மனிதன். தம்பி என்று நம்பி விட்டால் தலைக்கவசமாய் வந்து நிற்பார். கொடுக்கப்பட்ட பணிகளை எல்லாம் கோபுரமாய் உயரவிட்டவர். எளிய மனிதர். எதற்கும் ஆசைப்படாதவர். எதனைக் கண்டும் அஞ்சாதவர். சகோதரரின் நிறைவான அர்ப்பணிப்புக்காய் அன்போடு வாழ்த்துகிறேன்.

## அருட்சகோ.A.ஜெகதீஷ், SHJ




சூரமடை வெண்குருவி சகோ.A.ஜெகதீஷ். இவர் ஆரோக்கியசாமி - ஜோஸ்பின் தம்பதியிடம் இருந்து பிறந்த இறையருவி. பயணம் செய்யும் திருச்சபையில் மக்களுக்காய் இவரது பாதம் கடந்த பக்கங்கள் அதிகம். தொடக்கப் பள்ளிகளில் இவர் துவங்கிய சாதனைப்பக்கங்கள் ஏராளம். விவாதமேடையில் வில்லன் இவர் நினைத்த கருத்தை ஆழமாக விதைப்பதும் கொடுத்த பொறுப்புக்கு மேலும் அழகு சேர்ப்பதும் இவருக்குக் கைவந்த கலை. ஆங்கில உயர் கல்வியிலும் அசத்தியவர். உயர் பொறுப்புக்கு உரிய தகுதி இருந்தும் சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் என சிலாகித்துக் கொள்பவர். உங்கள் அர்ப்பணிப்புக்காய் வாழ்த்துகிறேன்.




## அருட்சகோ.T.அருள்ராஜ், SHJ

குட்டத்து ஆவரம்பட்டி குலவிளக்கு சகோ.T.அருள்ராஜ். தோமை - மரியரஞ்சிதம் தம்பதிகளின் வம்சவிளக்கு. தனக்கென்று ஒரு பணி என்று இல்லாமல் காலத்தின் தேவையைக் கடவுளின் குரலாக எடுத்துக் கொண்டு சபை கொடுக்கும் பணியில் எல்லாம் தன்னை இணைத்துக் கொண்டவர். சபை தனது பாதங்களை வடஇந்தியாவில் பதிக்கும் போது நான் இருக்கிறேன் என்று முன்வந்தவர்களில் இவரும் ஒருவர். இசைத்துறையோடு இசைந்து செல்கிறவர் இவரது கிட்டார் இசை கேட்பவர்களை மயக்கும். தனது கல்வியின் மைல் கல்லாக முனைவர் பட்டம் பெற்றுள்ளார். உங்களின் அர்ப்பணத்திற்கு எனது வாழ்த்துகள்.

## அருட்சகோ.A.பிரிட்டோ, SHJ




செங்குடியின் செல்லப்பிள்ளை சகோ.A.பிரிட்டோ. அருள்பிரகாசம் - வேதமாணிக்கத்தின் நல்ல பிள்ளை. பக்தியைப் பாடல் மூலம் பரவசமாக்குபவர். யாரும் பாதிக்கப்படாதபடி வார்த்தைகளைப் பேசக் கூடியவர். பல்வேறு இயக்கங்களோடு தன்னை இணைத்துக் கொண்டு இறைப் பணிக்காக நாடு விட்டு நாடு செல்லும் இதய சபை ஏவுகணை இவர். எளிதில் அணுகக் கூடியவர் எவருக்கும் உதவக்கூடியவர். எத்தகைய பொறுப்புக்கள் தந்தாலும் அத்தனையிலும் முத்திரை பதிக்கக் கூடியவர். தோழமையில் இவர் துணை நிற்பதால் எந்தத் தோல்விகளையும் தூக்கி எறிகிறார். அன்புச் சகோதரரின் அர்ப்பணிப்புக்காய் அன்போடு வாழ்த்துகிறேன்.




## அருட்சகோ.V.கன்னீஸ் பீட்டர், SHJ

சகோ.V.கன்னீஸ் பீட்டர் கனிந்த இதயம் கொண்டவர். கணக்கர் பணியிலும் வென்றவர். முத்துப்பேட்டையின் முத்து. வியாகுல ஜெபமாலை - அருளானந்தமாளின் குடும்பச்சொத்து. கல்விப் பணிக்காய் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். கடைக் கோடி மனிதனையும் தேடிச் சென்று கல்விப் பணியாற்றுபவர். இவர் எப்போதும் நட்புக்கும் பெரியோரின் சொல்லுக்கும் தனி மரியாதை செய்யக்கூடியவர். நீதியை உரக்கச் சொல்லவும் செய்வார். தூய நெஞ்சம் படைத்தவரே உங்களின் அர்ப்பணத்திற்காய் வாழ்த்துகிறேன்.





### அருட்சகோ.S.ஜெயசீலன், SHJ

சகோ.S.ஜெயசீலன் இவர் ஒரு மிதவாதி. ராஜபாளையத்தில் உதித்த இயேசுவின் ராஜா. சைமன் - இராஜம்மாள் தம்பதிகளின் இளவரசன். பல்வேறு இடங்களில் கல்விப் பணியாற்றிக் குழந்தைகளின் நலனுக்காக அரும்பாடுபட்டவர். யார் என்ன சொன்னாலும், மறுப்பேதும் கூறாமல் ஏற்றுக்கொள்வார். கடுஞ்சொல் கூறமாட்டார். எதற்கும் கவலைப்படவும் மாட்டார். தோல்வியைக் கண்டு துவளவும் மாட்டார், வெற்றியைக் கண்டு ஆடவும் மாட்டார். நிதானம் தவறாதவர். அன்புச் சகோதராரின் அர்ப்பணிப்புக்காய் அன்போடு வாழ்த்துகிறேன்.

### அருட்சகோ.A.டேவிட் பிரான்சிஸ், SHJ





சகோ.A.டேவிட் பிரான்சிஸ் இவர் எறையூரின் இளவல் அம்புரோஸ் - சவரியம்மாளின் குமாரர். உருவாக்கும் பணிக்கு தன்னை உருவாக்கியவர். சபைக்கு உயிர் கொடுக்கும் பணிக்கு தன்னை இரையாக்கியவர். சபைக்குப் பணம் சேர்க்கும் அரசுப் பணிக்குத் தன்னை வார்க்காமல் நல்ல குணத்தை உருவாக்கும் நவ துறவு இல்லத்தைச் சிறப்புற அமைத்துக் கொடுப்பவர். நடுநிலை தவறாதவர். உண்மையை உரைக்க எதனோடும் சமரசம் செய்து கொள்ளாதவர். இத்தகைய குணம் கொண்ட இனிய இளவலே, உங்களின் அர்ப்பணிப்புக்காய் அன்போடு வாழ்த்துகிறேன்.





### அருட்சகோ.D.டென்னிஸ் மைக்கேல், SHJ

கருத்தப்பிள்ளையூர் தந்த கர்த்தரின் பிள்ளை சகோ.D.டென்னிஸ் மைக்கேல். இவர் தேவசகாயம் - மரியபாக்கியம் தம்பதிகளின் நகல். இவர் மிகவும் மென்மையானவர். ஆயினும் உண்மையானவர். இவரது புன்னகையும் பொங்கி வரும் வார்த்தையும் சந்திப்பவர்களைச் சந்தன காற்றாய் வருடிச் செல்லும். நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியன் இவரது வார்த்தை சுடாது, மழலைச் சொற்கள் போல் கேட்பவருக்கு இன்பம் அளிக்கும். இசைத்துறையில் எங்கள் சபை இளையராஜா. ஊடகத்துறையிலும் இவர் கருத்துக்கள் உற்சாகமூட்டும். இவரின் கரங்களில் இசைகருவியும் கணிணியும் நர்த்தனமிடும். சொற்களைப் பயன்படுத்தும் போது பூக்களுக்கும் வலிக்காமல் போதிக்கக் கூடியவர். இதய சபையின் பொதுச் செயலரே அன்போடு வாழ்த்துகிறேன்.

### சகோ.K. அந்தோணி கிறிஸ்டோபர், SHJ





மறவபட்டி தந்த மாணிக்கமே, குழந்தை ராஜ் - திரவிய மேரியின் குலக்கொழுந்தே, தப்பிப்பிழைத்து தலைச்சான் பிள்ளையாக நிற்கின்ற தவப்புதல்வனே உலக நாகரீகத்தில் உருண்டு விடாமல் இறைவனின் வார்த்தையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பயணம் தொடங்கிய புதிய தலைமுறையே. தொடங்கிய பயணம் தடையின்றித் தொடர்ந்து தரணிக்கு வழிகாட்ட உன்னை வாழ்த்துகிறேன்.

**நிறைவாக..**

நல்லவர்களே நாதன் இயேசுவின் இறைவழியில் இதய சபையில் பயணிக்கும் எனது அருமை சகோதரர்களே காலம் தொடுக்கும் கேள்விக்கு ஏற்ப கடமை செய்யப் பணிக்கப்பட்டுள்ளீர்கள். அழைப்பு என்பது நமக்குப் பிழைப்புக்குக் காட்டிய வழி அல்ல, நமது உழைப்புக்கு விட்ட சவால் இதனை நன்கு உணர்வோம்.

**எரியும் நெருப்பில் மோயீசனையும்**
**இடியின் ஒளியில் சின்னப்பனையும்**
**வீசும் காற்றில் எலியாசையும்**
**ஆர்ப்பரிக்கும் கடலில் சீடர்களையும்**

அழைத்த இறைவன் உங்களையும் என்னையும் இக்காலத் தேவைக்காக அழைத்துள்ளார். இறைவன் வகுக்கும் புதிய பாதைக்கு நம்மை சல்லிக்கல்லாக அல்லாமல், சலவைக் கல்லாக இட்டு இறையரசை எழுப்ப எண்ணிக் கொண்டிருக்கிறார். இந்த அழைப்பு மட்டும் இல்லாது போனால் ஆதிக்காலம் மட்டுமல்ல மீதிக் காலமும் சூனியமாக்கப்பட்டிருக்கும். ஆகவே சகோதரர்களே நமக்கு இருக்கும் ஒரே சவால் இந்த நாகரிக உலகில் போட்டி பொறாமைகளுக்கு மத்தியில் எல்லோருக்கும் சகோதரர்களாய் வாழ்வதுதான். வாருங்கள் சகோதரர்களே நம் சாதனைகளின் உச்சம் எச்சூழலிலும் எல்லோருக்கும் சகோதரர்களாய் இருப்பதுதான். சகோதரர்களாய் வாழ்வோம். சகோதரர்களுக்காய் வாழ்வோம். சகோதரத்தை வளர்க்க வாழ்வோம். வாருங்கள் இணைவோம். இறையரசு மலரட்டும், இதய சபை வளரட்டும்.

# MAY

## HAPPY BIRTHDAY

04 Br. A. Solomon Raja
05 Br. A. Innasi Inigo
06 Br. A. Joseph Arul Raj
07 Br. L. Franklin Mathew
10 Br. P. Prakash
15 Br. A. Victordass
16 Br. S. Thomas Robert Edward
25 Br. C. Jayakumar
31 Br. A. Sahaya Jaya Kumar
31 Br. A. Vincent Paul

## Happy Feast

12 Br. I. Pancras
19 Br. R. Abraham
24 Br. C. Sagayaraj

## Departed

03 Br. J. Irudayadasan
05 Br. S. Lawrence
11 Br. T.M. Soosai
12 Br. G. Savarianandan
17 Br. A. Antony Savarimuthu
18 Br. R. Mathias
19 Br. K. J. John Karimpanil
20 Br. D.Maria Pragasam
20 Br. S. Maria Arockiam
22 Br. A. Lourdusamy
22 Br. N.A. Joseph Arockiam
24 Br. S. Raphael
27 Br. M. Devasagayam
31 Br. R. Aloysius
31 Br. M. Lawrence

## Obituary

**Mrs. Backia Mary**

Aged 77,
the beloved Mother of our
Br. C. Sunil Benjamine, SHJ
who rested in the Lord
on 27th April 2025.

**May God in His eternal mercy grant her souls peace and rest.**

## Monthly Prayer Intention



**For working conditions.**

**Let us pray that through work, each person might find fulfilment, families might be sustained in dignity, and that society might be humanized.**

## Prayer to Our Lady of Fatima



O Most Holy Virgin Mary, Queen of the most holy Rosary, you were pleased to appear to the children of Fatima and reveal a glorious message. We implore you, inspire in our hearts a fervent love for the recitation of the Rosary. By meditating on the mysteries of the redemption that are recalled therein may we obtain the graces and virtues that we ask, through the merits of Jesus Christ, our Lord and Redeemer.

*Amen.*

## OUR HEARTFELT CONDOLENCES


MAY THE SOUL OF OUR HOLY FATHER



**POPE FRANCIS**

*REST IN PEACE*

Caussanel Province
Brothers of the Sacred Heart of Jesus



to Caussanel Province e-mail ID on or before **25 of every month.**

**CAUSSANEL PROVINCIALATE**
Suhalayam, Irudayakulam, Tirunelveli District
Phone : 04634 221448 / Mobile : 8754346175
Email : caussanelprovince@gmail.com
Website : www.caussanelprovince.com